**பத்திரிக்கைக் குறிப்பு**

# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in
**e-mail:** helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

**பிப்ரவரி 25, 2003**

## பணத்தாள்களைக் கம்பிப் பிணைப்பான் மூலம் கட்டுவதைக் கைவிட வேண்டும். வங்கிகளுக்கும் பொது மக்களுக்கும் இந்திய ரிசர்வ் வங்கியின் வேண்டுகோள்

பணத்தாள் கட்டுகளுக்குக் கம்பிப் பிணைப்படும் பழக்கத்தினைக் கைவிட வேண்டும் என்பதை இந்திய ரிசர்வ் வங்கி கட்டாயமாக்கியுள்ளது. பொதுமக்களின் நலன் கருதி அவர்களுக்குச் சுத்தமான நல்ல பணத்தாள்களை வழங்க வேண்டுமென்ற நோக்கத்திச்காக 1949 ஆம் ஆண்டு வங்கி நெறிமுறைச் சட்டம் பிரிவு 35அ இன் கீழ் இந்திய ரிசர்வ் வங்கி ஓர் வழிகாட்டு கட்டளையைப் பிறப்பித்தது.

இந்திய ரிசர்வ் வங்கி கம்பிப் பிணைப்பிடாத புதுப் பணத்தாள்களை பொதுமக்களுக்கும் வங்கிகளுக்கும் வழங்கிக் கொண்டிருந்தது. வங்கிகள் இந்தப் புதுப் பணத்தாள்களைப் பொதுமக்களுக்கு வழங்குப்போது அந்தக் கட்டுகளைக் கம்பிப் பிணைப்பிட்டு வழங்கின என்பது தெரியவந்தது. மேலும் வங்கிகள் வலுமிக்க தடிப்பான எஃகுக் கம்பிகளைக் கொண்டு திரும்ப வழங்குவதற்குரிய பணத்தாள் கட்டுகளை பல கம்பிகளுடைய பிணைப்பு மூலம் இறுகக் கட்டி வழங்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தன. இந்தக் கம்பிகளை அகற்ற பொதுமக்கள் மிகுந்த இடர்பாடுகளுக்கு உள்ளானார்கள். பொதுமக்களுக்கு அக்கம்பிகள் காயத்தை ஏற்படுத்தியதோடல்லாமல் பணத்தாள்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தின. அத்தகைய பாதிப்புக்குள்ளான பணத்தாள்களை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வங்கிகள் மறுத்தன. நல்ல பணத்தாள்கள் பாதிப்புக்கு உள்ளானதற்கு முதல் காரணம் கம்பிப் பிணைப்பான்களே.

பணத்தாள்களைக் கம்பியால் பிணைப்பதை எதிர்த்து அரசாங்கத்துக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும் ஏராளமான புகார்கள் வந்தன. இந்திய ரிசர்வ் வங்கி இது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வு, வேறு எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட பழக்கம் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியது. இந்திய ரிசர்வ் வங்கி 1998 ஆம் ஆண்டிலிருந்து வங்கிகள் இப்பழக்கத்தைத் தொடரக்கூடாது என்பதை அறிவுறுத்தி

வருகிறது. வங்கிகள் பணத்தாள்களைக் கம்பியால் பிணைக்கக்க் கூடாது எனும் ஆணை நவம்பர் 2002இல் பிறப்பிக்கப்பட்டது.

பொது மக்கள் இந்திய ரிசர்வ் வங்கி எடுத்த நடவடிக்கையைப் பெருமளவில் வரவேற்றனர்.

வங்கிகளிடமிருந்தும் அரசாங்கத்துறைகளிடமிருந்தும் பெறப்பட்ட பழுதான பணத்தாள்களை இந்திய ரிசர்வ் வங்கியின் அலுவலகங்கள் கையாளும் செயற்பாங்கு சிறப்பானது. முற்றிலும் தானியங்கு செயல்முறை கொண்ட இயந்திரம் மூலம் மிகக் கெடுபிடியான பாதுகாப்புச் சூழலில் அங்கு நடக்கும் நடவடிக்கைகளை வரையறுக்கப்பட்ட பார்வையாளர்களை உள்ளடக்கிய தொலைக்காட்சிக்கு உட்படுத்தி அச்செயல் நடைபெறுகிறது.

அல்பனா கில்லாவாலா
பொது மேலாளர்

**பத்திரிகை வெளியீடு-2002-2003/891**